# காரைதீவு பிரதேச சபை

# அம்பாறை மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 மார்ச் 09 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 ஆகஸ்ட் 10 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 ஆகஸ்ட் 14 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, காரைதீவு பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காரைதீவு பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆரம்ப திரண்ட நிலுவை ரூபா 283,600 கூடுதலாகக் கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஆ) கேள்வி வைப்புக்கள் ஆன ரூபா 78,907 ஐ மீளளிக்க நடவடிக்கை எடுக்கப்படாமல் வைப்புப் புத்தகத்தில் நீண்டகாலமாக இருந்தது.

(இ) சபையினால் 2006 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை வருவாய்க்கு மாற்றப்பட வேண்டிய வைப்புகள் ரூபா 1,138,064 ஆகும். இது காலவரையும் இது வருமானத்திற்கு மாற்றப்படாமல் உள்ளது.

(ஈ) 2009 ,2010 2011,ஆம் ஆண்டிற்கான பெறவேண்டிய முத்திரைத் தீர்வை கணக்கிடப்பட்டுக் கணக்கிற்குக் கொண்டு வரப்படவில்லை.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2011 டிசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின்போது சபையின் மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானம் ரூபா 5,271,906 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானம் ரூபா1,834,734 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் நிதிக் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் பொதுச் சந்தை, இறைச்சிக் கடைகள்,கோழி இறைச்சிக்கடை ஆகியவற்றின் நிலுவையாக உள்ள அரசிறை ரூபா 437,936 ஆகும். இவற்றை அறவீடு செய்வதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெறுமதி சேர் வரி (VAT) மற்றும் பிடித்து வைத்தல் வரி (WHT) ரூபா 611,393 என்பன இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்படாமல் வைப்புக் கணக்கில் காணப்படுகின்றதது.

### 2.3 வருவாய் நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருவாய், உள்ளவாறான வருவாய் மற்றும் நிலுவை வருவாய்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருவாய், உள்ளபடியான வருவாய், நிலுவை வருவாய் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | டிசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | தீர்வையும் வரியும் | 5 | -- | -- |
| (ii) | வாடகை | 1,659 | 784 | -- |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 7,190 | 10,965 | -- |
| (iv) | ஏனைய வருமானம் | 14,660 | 111,767 | 9,431 |

### 2.3.2 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா.4,431,615 ஆகும். முத்திரைத் தீர்வை ரூபா. 453,550 ஆகும்.

## 2.4 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினர்**

2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினர் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| பதவிகளின் வகை | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளவாறானது |
|---|---|---|
| பதவி நிலைத் தரங்கள் | - | 01 |
| துணைத் தரங்கள் | 06 | 12 |
| ஆரம்ப தரத்தினர் | 07 | 07 |
| வேறு (அமைய / தற்காலிக) | ------ | 09 |
| | **13** | **29** |

## 2.5 ஊழியர் கடன்

சபையின் 04 உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய ஊழியர் கடன் ரூபா 34,492 ஐ அறவீடு செய்வதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.6 உள்ளகக் கணக்காய்வு

சபையில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிருவாகம்